செ.வெ. எண்: 449 நாள்: 30–07–2012

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலை பண்பாட்டு இயக்ககம்)

## செய்திக் குறிப்பு

## நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தில் நிதியுதவி வழங்க நலிந்த கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது

தமிழக அரசின் திட்டங்களில், நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தில் திங்கள்தோறும் ரூ.1000/– (ரூபாய் ஓராயிரம் மட்டும்) நிதியுதவி வழங்குவதற்கு இயல், இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம், கிராமியக் கலைகள் மற்றும் ஓவியம், சிற்பம் ஆகிய கலைத்துறைகளில் குறிப்பிடத்தக்க சிறப்புப் பணியாற்றி தற்போது 58 வயதுக்கு மேற்பட்ட, நலிந்து வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

விண்ணப்பப்படிவங்கள் { HYPERLINK "http://www.tn.gov.in/appforms/artculture/iyal_isai_appform" }.pdf என்ற இணையதள முகவரியிலிருந்தும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் , ஆணையர், கலை பண்பாட்டு இயக்ககம் மற்றும் மண்டல கலை பண்பாட்டு மையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் தக்க சான்றுகளுடன் வருவாய்த்துறை / கோட்டாட்சியர் பரிந்துரைகளுடன் பின்வருமாறு, தங்களது மாவட்டம் உள்ளடக்கிய மண்டலக் கலை பண்பாட்டு மையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்

| விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய மண்டல அலுவலகம் | மண்டலங்களில் உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|
| உதவி இயக்குநர்,காஞ்சிபுரம் மண்டலக்கலை பண்பாட்டு மையம்<br>73–ஏ, மேட்டுத் தெரு, காஞ்சிபுரம்.–631 501.<br>தொலைபேசி. 044–27231339 | சென்னை, காஞ்சிபுரம்,<br>திருவள்ளூர், வேலூர்,<br>திருவண்ணாமலை |
| உதவி இயக்குநர்,தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையம்,<br>5, மணிமேகலை தெரு, முத்தமிழ் நகர்,<br>மருத்துவக் கல்லூரிச் சாலை, தஞ்சாவூர்–613 007.<br>தொலைபேசி. 04362–240252 | தஞ்சாவூர், விழுப்புரம்,<br>கடலூர், நாகப்பட்டினம்,<br>திருவாரூர் |

| | |
|---|---|
| உதவி இயக்குநர், மதுரை மண்டலக் கலை பண்பாட்டு மையம், அரசு இசைக்கல்லூரி வளாகம், பசுமலை, மதுரை–625 004. தொலைபேசி.0452–2374420 | மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை |
| உதவி இயக்குநர், சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையம், சாரதா கல்லூரிச்சாலை,அழகாபுரம், சேலம்–636 016 தொலைபேசி.0427–2442197 | சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, நாமக்கல்,கிருஷ்ணகிரி, ஈரோடு,தருமபுரி, திருப்பூர் |
| உதவி இயக்குநர், திருச்சி மண்டலக் கலை பண்பாட்டு மையம், 15, சமது பள்ளித்தெரு, காசா நகர், திருச்சி–620 020. தொலைபேசி.0431–2423122 | திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர், கரூர் |
| உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மையம், தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மையக் கட்டிடம், 820, டிரக்டர் தெரு, அரசு அலுவலர் *அ* குடியிருப்பு, திருநெல்வேலி–627 007. தொலைபேசி.0462–2553890 | திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், கன்னியாகுமரி |

இத்திட்டத்தில், 2009,2010,2011 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பம் செய்துள்ள, கலைஞர்கள் தற்போது மீண்டும் விண்ணப்பம் செய்யத் தேவையில்லை.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 30.09.2012.

நிருவாக அலுவலர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**